## ஐந்து இலட்சம் செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி!

# 10 மாவட்டங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் மேம்பாட்டுப் பணிகள்!

## சட்டப்பேரவையில் கால்நடை – மீன்வளத்துறை மானியத்தில் 34 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பதிலுரை!

சென்னை, ஜுன் 26-

**சட்டப்பேரவையில் கால்நடை மற்றும் மீனவர் நலத்துறை மானியக் கோரிக்கையில் 34 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அளித்த பதிலுரையில் 10 மாவட்டங்களில் மீன் பிடித் துறைமுகங்கள் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், ஐந்து இலட்சம் செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய் கடி நோய் தடுப்பூசி போடப்படும் என்றும் அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் மீன்வளம்மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதிலுரை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களினுடைய பேராதரவோடு தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பேற்ற தளபதி அவர்கள் இந்த 3 ஆண்டு காலத்தில் ஏழை, எளிய மக்களுக்கு, பெண்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு, தொழிலாளர் தோழர்களுக்கு, மீனவ சமூகங்களுக்கு என எண்ணற்ற சாதனைகளை, நலத் திட்டங் களை வழங்கியுள்ளார்கள். அதற்குப் பரிசாகதான் தமிழ்நாட்டு மக்களும் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாண்டிச்சேரி உட்பட நாற்பதுக்கும் நாற்பது என்கிற பரிசினை நமது முதல்வர் தளபதியார் அவர்களினுடைய பொற்கரங்களில் ஒப்படைத்து மகிழ்ந்தார்கள்.

இந்த மாபெரும் வெற்றியின்மூலம் நமது வாக்காளப் பெருமக்கள் இந்திய திருநாட்டையே தமிழ்நாட்டின் பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்தார்கள். அத்தகைய ஆற்றல்மிக்க தலைவர் முதல்வர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

தலைவருக்குத் தக்க துணையாக, இளைஞரின் எழுச்சி நாயகராக, எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சென்று மக்களைச் சந்தித்து மாபெரும் வெற்றியினைத் தேடித் தந்தார்கள். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்த்து நின்றவர்கள் அத்துனை பேரையும் டெபாசிட் இழக்கச் செய்து எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு மாபெரும் வெற்றியினைத் தேடித் தந்த தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

“எல்லோருக்கும் எல்லாம்” என்ற உன்னதக் கொள்கையினை தாங்கி அனைத்து உயிர்களையும் நேசித்து, காப்பாற்றி வருகின்ற தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் கிராமப்புறத்தில் வாழும் ஏழை, எளிய மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டால்தான் நாட்டின் வளர்ச்சி உரிய இடத்தை அடைய முடியும். அதற்கு கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்துவது தான் சிறந்த வழியாக இருக்கும் என்பதை தன்னுடைய பல்வேறு திட்டங்கள் மூலமாக தொடர்ந்து நிரூபித்து வருகிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை தந்து இந்திய திருநாட்டிற்கே முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறார்கள், நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

**கால்நடை வளர்ப்புத் தொழில்!**

கால்நடை வளர்ப்புத்தொழில் என்பது கிராமப்புறங்களின் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு கிராமப்புற மக்களினுடைய ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்கிடும் முக்கிய காரணியாகவும் திகழ்ந்து வருகிறது.

நான் எப்போதும் குறிப்பிடுவது போல கால்நடை வளர்ப்புத் தொழில் என்பது கிராம மக்களுக்கு ATM இயந்திரம் போன்றது. தேவையான நேரத்திற்கு, தேவையான பொருளாதாரத்தை தந்து குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி பசுந்தீவன உற்பத்தியை பெருக்க துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சில திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கடந்த 2 ஆண்டுகளில், 4 ஆயிரம் ஏக்கரில் பசுந்தீவன பயிர்களை விவசாயிகள் ஊடுபயிராக சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் திட்டம் ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியத்தில் செயல்படுத்தப்பட்டது. மேய்ச்சல் நிலங்களில் பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளும் திட்டத்தில் 30 மாவட்டங்களில் 1,000 ஏக்கர் மேய்க்கால் நிலங்களில் பசுந்தீவனம் மற்றும் மரத் தீவனப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பசுந்தீவன சாகுபடி மேற்கொள்ளும் திட்டம் சேலம், விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 25 ஏக்கர் மேய்க்கால் நிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. தீவன விரயத்தை குறைத்திடும் வகையில் 3 ஆயிரம் பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படுகின்றன.

செயற்கை முறை கருவூட்டலின் செயல்திறன் மேம்பாட்டில் முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறார்கள். துறையின்கீழ் செயல்படும் உறை விந்து உற்பத்தி நிலையங்கள் மேம்பாடு, உயர் மரபியல் திறன் கொண்ட பொலி காளைகள், காளைக் கன்றுகள் கொள்முதல், திரவ நைட்ரஜன், உறைவிந்து குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்துதல், நாட்டினமான உம்பளாச்சேரி மாட்டினத்தை மேம்படுத்த கொருக்கை பண்ணையின் உள்கட்ட மைப்பை வலுப்படுத்துதல், நடுவூர் கால்நடைப் பண்ணை பயிற்சி மைய கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக முதலமைச்சர் அவர்கள் 38 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளார்கள். நவீன தொழில்நுட்பங்களான பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் உற்பத்தி, கருமாற்ற தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுக்கூட கருத்தரித்தல் முறைகளில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

ஊரக பொருளாதார மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக்கொண்டு செயல்படும் கால்நடை பராமரிப்புத் துறையில், மாநில அரசின் நிதி, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, ஆகியவற்றின்மூலம் கடந்த 2021-2022 ஆம் ஆண்டு முதல் மொத்தம் 227 கால்நடை நிலையங்கள், கள கண்காணிப்பு அலுவலகங்கள், பண்ணைக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புதிதாகக் கட்டுவதற்கு ரூபாய் 125 கோடியே 76 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 202 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பண்ணை முறை கோழிகள் வளர்ப்பில், தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும், நாட்டினக் கோழி வளர்ப்பை பிரபலப்படுத்த வும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் தலா 100 பயனாளிகளுக்கு 250 கோழிகள் கொண்ட நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள் நிறுவும் திட்டம் 50 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வருடத்திற்கு சுமார் 9 இலட்சம் “ஒரு நாள் வயதுடைய நாட்டு கோழிக்குஞ்சுகள்” மற்றும் 2 ஆயிரம் டன் தீவனமும் உற்பத்தி செய்யும் விதமாக, குஞ்சு பொரிப்பகத்துடன்கூடிய நாட்டுக் கோழி இனப்பெருக்க மற்றும் வளர்ப்பு பண்ணைகள் திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ரூ.23 கோடியே 24 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தீவன ஆலையுடன் நிறுவப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

கால்நடை வளர்ப்பினை, பண்ணை முறையில் மேற்கொள்ளும்விதமாக தொழில் முனைவோர் உருவாக்கல் திட்டத்தின்கீழ் பண்ணை முறையில் கோழி வளர்ப்பு, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, தீவனம் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி ஆகிய தொழில்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

முதலமைச்சர் அவர்களின் இலட்சியமான அனைவருக்கும் சமத்துவ சரிசமமான வளர்ச்சியை இலக்காக கொண்டுள்ள இத்திட்டத்தில் இது வரை 98 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் 96 விண்ணப்பங்கள் ஒன்றிய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இது வரை, 68 கோடியே 37 இலட்சம் ரூபாய் அளவு திட்ட முன்வடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மொத்தம் 30 கோடியே 95 இலட்சம் ரூபாய் மானியமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்!**

தமிழ்நாடு அரசால் 2022ம் ஆண்டில் அருட்பெரும் ஜோதியாம் வள்ளலார் அவர்களின் 200வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, துவக்கப்பட்ட “வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்” திட்டத்தின்மூலம் ஆதரவின்றி தெருக்களில் சுற்றித்திரியும் கால்நடைகளை பராமரிக்கும் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், மற்றும் விலங்கு நல அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை, 29 அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வரும் 4,579 கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி, 7 அமைப்புகளுக்கு உறைவிடங்கள் கட்டுதல், 13 அவசர சிகிச்சை ஊர்திகள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளுக்கு நாளது வரை சுமார் 9 கோடியே 6 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கால்நடைகளுக்கும் எந்தவித நோய்ப் பாதிப்பும் ஏற்படக்கூடாது எனும் கொள்கையுடன் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு கால்நடைகளின் உடல்நலம் பேணுதலில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த 2023-2024 ஆம் ஆண்டில், 60 இலட்சத்து 22 ஆயிரம் பசுவினங்களுக்கு தோல் கழலை நோய் தடுப்பூசிகள், சுமார் 86 இலட்சம் மாட்டினங்களுக்கு மார்ச் மற்றும் நவம்பர் மாதங்களில் கோமாரி நோய்த் தடுப்பூசிகள், சுமார் 11 இலட்சத்து 3 ஆயிரம் கிடேரி கன்றுகளுக்கு கன்று வீச்சு நோய்த் தடுப்பூசிகள் அடைப்பான், தொண்டை அடைப்பான், ஆட்டம்மை, சப்பை நோய் ஆகிய நோய்களின் தாக்கம் இருக்கும் மாவட்டங்களில் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மனிதர்களுக்கு கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகள் மூலம் பரவும் வெறிநோயை கட்டுப்படுத்த, 456 வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989 ஆம் ஆண்டு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் ஆசியாவிலேயே முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமாக துவங்கப்பட்டது. அகில இந்திய அளவில் முன்னோடியாக விளங்கும் இப்பல்கலைகழகத்தின்கீழ் இயங்கும் 7 கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பும், தொழில் நுட்ப கல்லூரிகளில், உணவுத் தொழில்நுட்பம், பால் தொழில்நுட்பம் மற்றும் கோழி இனத் தொழில்நுட்ப பாடங்களில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பும் வழங்கப்படுகின்றன. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 20212022 ஆம் கல்வி ஆண்டு முதல் இளநிலை கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்ப பாடப்பிரிவுகளில் முறையே 660 மற்றும், 100 இடங்களுமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**103.17 இலட்சம் மெட்ரிக் டன் பால் உற்பத்தி!**

மனித இனத்தின் உற்ற தோழர்களான கால்நடைகளின் பராமரிப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவதன் விளைவாக தமிழ்நாட்டில் 103.17 இலட்சம் மெட்ரிக் டன் பால் உற்பத்தியும், 2,156 கோடி முட்டை உற்பத்தியும், 7.04 இலட்சம் டன் இறைச்சி உற்பத்தியும் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைத் துறை புதிய தொழில்நுட்பங்களையும், உள் கட்டமைப்புகளையும் மேம்படுத்திட



தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் கால்நடைத் துறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தி வருகிறார்கள். இதற்கு பல உதாரணங்களை எனது உரையிலே தெரிவித்துள்ளேன்.

**1,808 கால்நடை உதவி மருத்துவர்கள்!**

புதிய கால்நடை உதவி மருத்துவர் பணி நியமனத்திற்கு எதிராக நீண்ட காலமாக நடைபெற்று வந்த வழக்குகள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, இதுவரை 1,808 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, மருத்துவர்கள் இல்லை என்ற நிலை இல்லாது ஆக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறாக தொலைநோக்குப் பார்வையோடு கால்நடை பராமரிப்புத் துறை வழிகாட்டுதல் மூலமாக கால்நடையை நம்பி வாழும் எழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்கள் பொருளாதார மேன்மை அடையவும், திட்டங்கள் பல தீட்டி அவற்றை செம்மைப்படுத்தி எங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாகவும் கலங்கரை விளக்கமாகவும் திகழும் முதலமைச்சர் அவர்களுக்கு துறை அமைச்சர் என்ற முறையில் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து உரையினை நிறைவு செய்கிறேன்.

**அறிவிப்புகள்!**

1. புழக்கடை கோழி வளர்ப்பானது ஏழ்மை மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்வதோடு பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், அவர்களது வருமானத்தை பெருக்கிடவும் வழிவகை செய்வதால், தமிழகத்தில் ஏழ்மை நிலையில் உள்ள, குறிப்பாக கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற 38,700 பெண் பயனாளிகளுக்கு (ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 பயனாளிகள் வீதம், சென்னை நீங்கலாக) தலா 40 நாட்டின கோழிக் குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

2. அதிக பரப்பளவில் பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்து தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உயர் மரபுத்திறன் கொண்ட கால்நடைகளை இனப்பெருக்கத்திற்காக வளர்க்கும் பொருட்டும் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நடுவூர் மாவட்ட கால்நடைப் பண்ணை மேம்படுத்தப்படும்.

3. புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் உயர் மரபுத்திறன் கொண்ட கால்நடைகளை இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பதற்கும், பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கும் ரூபாய் ஐந்து கோடி செலவில் உள்ளீடு வசதிகள் வழங்கப்பட்டு இப்பண்ணை மேம்படுத்தப்படும்.

4. செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள பயிரடப்படாத 100 ஏக்கர் நிலப்பரப்பில் அதிக மகசூல் தரும் பசுந்தீவனப் பயிர் வகைகள் ரூபாய் ஐந்து கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

5. விவசாயிகள் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் உலர் மற்றும் பசுந்தீவனங்களை சிறிய துண்டுகளாக நறுக்கி அவற்றின் தரம் மாறாமல் கால்நடைகளுக்கு உணவாக அளிப்பதற்கு, மின்சாரத்தால் இயக்கப்படும் 3000 புல்நறுக்கும் கருவிகள் ரூபாய் ஐந்து கோடி செலவில் 50 விழுக்காடு மானியத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

6. மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், கால்நடைகளுக்கு உணவளிப்பதற்காகவும் பாசனத்தில் உள்ள 2000 ஏக்கர் விவசாயிகளின் நிலபரப்பில் சாகுபடி செய்வதற்காக ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் செலவில் அதிக மகசூல் தரும் தானிய வகை மற்றும் பயறு வகை தீவன விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

7. விவசாயிகளின் கால்நடைகளுக்கு சீரான ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காகவும் தீவனத்தின் சுவை மற்றும் செரிமானத்தை அதிகரிப்பதற்காகவும் மாநிலம் முழுவதும் 5000 ஏக்கர் விவசாயிகளின் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்ய ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி ஐந்து இலட்சம் செலவில் தீவன சோளம் மற்றும் தட்டைபயறு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

8. மாநிலத்தில் பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களின் தேவை அதிகம் உள்ளதால், தீவன அபிவிருத்தியில் உள்ள சமீபத்திய புதுமையான தொழில்நுட்பம் பற்றி தமிழ்நாடு வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் 120 அலுவலர்களுக்கு ரூபாய் பத்து இலட்சம் செலவில் தீவன உற்பத்தி, பாதுகாப்பு முறைகள், மேய்க்கால்/மேய்ச்சல் நிலம் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்த பயிற்சி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும்.

9. விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் கொடிய நோயான வெறிநாய்க்கடி நோயினை தடுப்பதற்காகவும் மனிதர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் ஒருங்கிணைந்த சுகாதாரத்தின் கீழ் 5 இலட்சம் செல்ல பிராணிகளுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் 50 விழுக்காடு மானியத்தில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படும்.

10. கால்நடை நிலையங்களில் கால்நடைகளுக்கு நவீன தொழில் நுட்பங்களில் சிகிச்சை அளிக்கவும், நவீன நோயறிதல் கருவிகளை திறம்பட கையாளவும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் மூலம் 400 கால்நடை மருத்துவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

11. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவியருக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் வரும் சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதி வளாகத்தில் தங்கி பயிலக்கூடிய 300 மாணவியருக்கு பாதுகாப்பான விடுதி ரூபாய் இருபத்தி ஐந்து கோடி செலவில் கட்டப்படும்.

**மீன்வளம் - மீனவர் நலத்துறை**

மீனவ மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று நல்லாட்சி நடத்தி வரும் நம் முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடத்திய ஒரு சிறப்பு மிக்க மாநாட்டை பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய துணை கண்டத்தில் இதுவரை எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத சாதனையாக மீனவ பெருமக்களுக்கு என்று ஒரு மாநாட்டை நடத்தி அதில் மீனவ மக்களின் நீண்ட கால கோரிக்கைகளை எல்லாம் சில மணி நேரங்கள் நடந்த அந்த மாநாட்டிலேயே நிறைவேற்றி கொடுத்த சாதனையாளர்தான் நம் முதல்வர் தளபதி அவர்கள்.

## மீனவர்களின் கலங்கரை விளக்கமாகத் திகழும் முதல்வர் மீனவர்கள் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறார்!

குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் மீன்பிடி தடை கால நிவாரணம் ரூபாய் 5 ஆயிரம் என்று இருந்ததை ரூபாய் 8 ஆயிரம் என உயர்த்தி ஆணையிட்டார்கள். இதன்மூலம் இந்த வருடம் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மீனவ குடும்பங்களுக்கு 144 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலோர பகுதிகளில் மீனவர்களுக்கு அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு வெகுகாலமாக பட்டா வேண்டும், பட்டா வேண்டும் என்று கோரிக்கை வைத்து இருந்தார்கள். நம் தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் மீனவ மக்களின் இந்த நீண்ட கால கோரிக்கையினை அந்த மீனவர் மாநாட்டிலேயே நிறைவேற்றி உத்தரவிட்டார்கள். அதன்படி இதுவரை 6 ஆயிரத்து 242 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டு உள்ளது .

அதுமட்டுமல்ல முன்பெல்லாம் மீனவர்களுக்கான நிவாரணத் தொகை பெற வேண்டும் என்றால் அதற்கு என்று வயது வரம்பு இருந்தது, அதாவது 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு நிவாரணத் தொகை கிடையாது. அதையும் நம் முதல்வர் அவர்கள் உடைத்தெறிந்து மீன்பிடி தொழில் புரியும் மீனவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் நிவாரணத்தொகை வழங்கலாம் என்று ஆணையிட்டார்கள்.

கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டத்திற்கு ஒரு பகுதி நிதியினை ஒன்றிய அரசு தரவேண்டும். ஆனால் ஒரு தலைபட்சமாக செயல்படும் ஒன்றிய அரசு அந்த தொகையினை இதுவரையில் விடுவிக்கவில்லை.

இருப்பினும் மீனவ மக்களின் இதயம் எல்லாம் நிறைந்திருக்கும் நம் முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசுக்காக காத்திராமல் முழு தொகையையும் தானே வழங்கினார்கள். இதன்மூலம் சுமார் 4 இலட்சத்து 17 ஆயிரம் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் பயன்பெற்று உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம். நேரம் இல்லை. இருப்பினும் சில செய்திகளை மட்டும் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். கடலில் மீன்பிடிக்கும்போது காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவே மனம் பதறுகிறது. அவர்கள் மிகவும் வறுமையிலும், துன்பத்திலும் ஆழ்ந்து கிடப்பதை நாம் அறிவோம். அவர்களுக்கு உதவித் தொகையினை நாள் ஒன்றுக்கு ரூபாய் 250/ல் இருந்து ரூபாய் 350/ ஆக உயர்த்தி வழங்கி உள்ளார்கள் நம் முதல்வர் அவர்கள். மீனவர்களுக்கான விபத்து காப்பீடு திட்டத்தை ஒன்றிய அரசு உரிய காலத்தில் செயல்படுத்தாத காரணத்தால் மீனவ பெருமக்கள் காப்பீடு நிவாரணம் பெற இயலாத நிலையில் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள்.

இப்போதும் நம் முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல் தாமே முன்வந்து நிவாரணத்தை வழங்கிட உத்தரவிட்டார்கள். இந்த வகையில் 177 மீனவ குடும்பங்களுக்கு ரூபாய் 3 கோடியே 53 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டு உள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்பாராத நிலையில் கடல்அலையில் சிக்கி மீனவர் ஒருவர் காணாமல் போய்விட்டால், 7 ஆண்டுகள் கழித்துதான் அவர் இறந்து விட்டதாக கருதி காப்பீடு நிவாரணம் வழங்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது.

நம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அப்படிப்பட்ட ஏழை மீனவ குடும்பங்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு என்று ஒரு சுழல் நிதியை உருவாக்கி, அந்த நிதிக்கென்று ரூபாய் ஒரு கோடியினை ஒதுக்கி, அந்த நிதியில் இருந்து உடனடியாக மீனவ குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் உத்தரவிட்டார்கள். பாக்வளைகுடா பகுதியில் இராமநாதபுரம் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் மீன்பிடிப்பில் ஈடுபடும் போது, அவர்களுடைய படகுகள் இயற்கை சீற்றம் மற்றும் இயந்திர கோளாறு போன்ற காரணங்களினால் பன்னாட்டு எல்லைக்கோட்டினைக் கடந்து இலங்கை கடற்பகுதிக்குள் செல்ல நேர்கிறது. இந்நேர்வுகளில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலுக்கும் கைதுக்கும் உள்ளாகின்றனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படும் போதும், கைது செய்யப்படும் போதும் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டி இந்திய பிரதமர் மற்றும் வெளியுறவு துறை அமைச்சர் ஆகியோரை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இலங்கை அரசு மீனவர்களை மட்டும் அவ்வப்போது விடுவித்துவிட்டு, படகுகளை நாட்டுடமையாக்கும் செயல்களை தொடர்ந்து செய்து வருகின்றது. படகுகளை பறிகொடுத்த மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் துயரத்திற்கு உள்ளாகின்றனர். தற்போது, இலங்கை சிறையில் தமிழ்நாட்டைச் சார்ந்த 15 மீனவர்களும் 162 மீன்பிடி படகுகளும் உள்ளன.

சிறைபிடிக்கப்பட்ட படகுகளில் 14 படகுகள் உரிய விசாரணைக்குப்பின் இலங்கை நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளது. இதில் நல்ல நிலையில் உள்ள 12 படகுகளை மீட்டு தமிழகம் கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் 2023 அன்றே நிதி ஒதுக்கி மீட்புக்குழு அமைத்து ஆணையிட்டார்கள். ஆனாலும், ஒன்றிய அரசானது தமிழ்நாட்டின் மீட்புக்குழு இலங்கைக்கு சென்று விடுதலை செய்யப்பட்ட படகுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான அனுமதியை இன்றுவரை வழங்கவில்லை.

அதேபோல, தமிழக இலங்கை மீனவர்களுக்கு இடையேயான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு நடத்தப்படும் இந்திய இலங்கை கூட்டுப்பணிக்குழு கூட்டம்

2022 மார்ச் மாதத்திற்கு பின்னர் இதுவரை நடைபெறவில்லை. இந்த கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய அரசை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆனாலும், தமிழ்நாடு மீனவர் பிரச்சனையில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய மீனவர்கள் என்று கருதாமல் பாராமுகமாகவே செயல்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் அரசியல் காரணங்களுக்காக மீனவர்களை ஏமாற்றும் நோக்கத்தில் ஒன்றிய அமைச்சர்கள் அவ்வப்போது இராமேஸ்வரம் பகுதிகளுக்கு சென்று மீனவர்களை சந்தித்து இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்டுத்தருவோம் என்று வாக்குறுதி தருவதும், சில அரசியல் கட்சியினர் மீனவ பிரதிநிதிகளை டெல்லிக்கு அழைத்துச் சென்று ஒன்றிய அமைச்சர்களை சந்திக்க வைப்பதும் அவ்வப்போது நடந்து வந்தது. ஆனால், சிறைபிடிக்கப்பட்டு இலங்கையில் உள்ள படகுகளை மீட்பதற்கு எந்தவொரு திடமான நடவடிக்கையும் ஒன்றிய அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களில் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு சேதமடைந்த 151 மீன்பிடி படகுகளுக்கு ரூபாய் 6 கோடியே 74 இலட்சம் நிவாரணமாக வழங்கி மீனவர்களினுடைய வாழ்வாதாரத்தை பாதுகாத்துள்ளார்கள்.

**மிக்ஜாம் புயல் மீனவர்களுக்கு நிதி**

சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மற்றும் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்தது. ஒன்றிய அரசு எந்தவொரு நிவாரணமும் வழங்காத நிலையிலும் முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் விதமாக 27 கோடியே 41 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கினார்கள்.

இந்த இரண்டு பேரிடர்களின் போதும் பொதுமக்களில் பலர் வெள்ள அபாயத்தில் சிக்கி பாதிக்கப்பட்டு இருந்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சமூக அக்கறையோடு தங்களை மீட்பு பணியில் ஈடுபடுத்திக் கொண்ட மீனவப் பெருமக்களை அழைத்து பாராட்டி பரிசளித்து கௌரவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்